ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# 'எழுத்து' சி.சு.செல்லப்பாவும் மணிக்கொடி எழுத்தாளர்களும்

**முனைவர் தி. செந்தமிழ்ச்செல்வி**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி,
குரோம்பேட்டை, சென்னை-600044

முன்னுரை:

'எழுத்து' சி.சு.செல்லப்பா தற்காலத்தமிழ் இலக்கிய வரலாற்றில் விமர்சனம், புதுக்கவிதை, சிற்றிதழ் இயக்கம் என மூன்று தளங்களில் தீவிரமாகச் செயல்பட்டார். மறுமலர்ச்சித் தமிழின் முதல்வரும் மணிக்கொடி குழுவின் தலைவருமான வ.ரா.,வின் புதுமைக் கருத்துக்களையும் மகாத்மா காந்தியடிகளின் காந்தியச் சிந்தனைகளையும் உள்வாங்கிக் கொண்டு எளிமையாக வாழ்ந்து காட்டியவர் மணிக்கொடி எழுத்தாளர் சி.சு.செல்லப்பா. விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர். அவர் "காந்தி நீ இன்று இருந்தால்" என்ற தலைப்பில் குறுங்காவியமும், சத்யாக்ரகி என்ற தலைப்பில் காந்தியுகக் கதைகளையும் படைத்தவர்.

எமக்குத் தொழில் எழுத்து எழுத்து
என்று தவம் செய்தவர்.

'எழுத்து' பத்திரிகையைப் பதினொராண்டு நடத்தி இமைப்பொழுதும் சோர்வின்றி வாழ்ந்து காட்டியவர். ஜல்லிக்கட்டுப் பற்றித் தமிழில் 1959–ல் வெளிவந்த முதல்படைப்பு "வாடிவாசல்"குறுநாவல், பிராமண விதைவைப்பெண்ணாகிய சாவித்திரியின் மன உலகை நினைவோட்டமாக விவரிக்கும் "ஜீவனாம்சம்" நாவலையும், முறைப்பெண் நாடகத்தையும் படைத்தவர். தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஒரு இலட்ச ரூபாய்க்கான இராஜராஜன் விருதைப் பிரி;த்து பத்து எழுத்தாளர்களுக்கு அளித்தப்போது "நான் பத்தில் ஒருவனல்ல" என்று அப்பரிசை ஏற்க மறுத்துவிட்டார்.

"லியோ டால்ஸ்டாயின் போரும் அமைதியும்" நாவல்போல ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட "சுதந்திரதாகம்" என்ற நாவலை எழுதிக் கொண்டிருக்கிறேன். இந்நாவலுக்குப் பரிசு கிடைக்கும். அப்பொழுது நான் உயிருடன் இருக்க மாட்டேன்" என்று அவர் கூறியபடி "சுதந்திரதாகம்" நாவல் சாகித்ய அகாடமி பரிசு பெற்றது. இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி 1932 ஜனவரி இருபத்தாறாம் தேதி, சென்னை போர்ட் செயிண்ட் ஜார்ஜ்

கோட்டையில் உள்ள பிரிட்டிஷ் யூனியன் ஜாக்கொடியை இறக்கிவிட்டு நமது மணிக்கொடி ஏற்றப்பட்ட இரகசிய நிகழ்ச்சி போன்று வெளிவராத புதிய செய்திகளையெல்லாம் பதிவு செய்துள்ளார்..(1) மக்களிடம் அரசியல், இலக்கிய வேட்கையை ஏற்படுத்திய மணிக்கொடி எழுத்தாளர்களும் சி.சு.செல்லப்பாவும் எவ்வாறு ஒன்றிணைந்து ஒரு குழுவாகச் செயல்பட்டு இலக்கிய வேள்வி செய்தார்கள் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

தேசிய, சமூக உணர்வு, இலக்கிய ஆர்வம் போன்ற பண்புகளை மட்டுமே முதலீடாகக் கொண்டு, தமிழ்ப்பற்று மிகுந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் மூவரால் செப்டம்பர் 17-ஆம் தேதி 1933-ஆம் ஆண்டில் மணிக்கொடி தொடங்கப்பட்டது. மகாகவி பாரதியார் வித்திட்ட மறுமலர்ச்சி இலக்கியத்தைப் பலப்படுத்தி எழுத்தைத் தவமாகக் கொண்ட தன்னலமற்ற எழுத்தாளர்கள் ஒன்றிணைய மணிக்கொடி இடமளித்தது. தமிழக மக்களுக்குத் தேசிய விழிப்புணர்வையும், இலக்கியச் சுவையையும் ஊட்ட விரும்பிய மணிக்கொடி சீனிவாசனின் ஊக்கத்தினாலும் வ.ரா., தலைமையில் தோன்றிய இயக்கத்தினாலும் தமிழகம் முழுவதும் இருந்த எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்தனர். பாரதியின் இலக்கிய வாரிசான வ.ரா., தமிழிலே எதையும் எழுத முடியும் என்று எழுதிக் காண்பித்தவர். பாமரனுக்கும் புரியும் எளிய தமிழ்நடையில் எழுத வேண்டும் என்ற கொள்கையைக் கட்டுரைகள், நடைச் சித்திரங்கள் கதைகள் மூலம் வ.ரா., வெளிப்படுத்தினார்.

மதுரை மாவட்டம் வத்தலகுண்டு அருகில் உள்ள சின்னமனூர் என்னும் சிற்றூரில் 1912-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் தேதி பிறந்தார். பிறந்த ஊரின் முதலெழுத்தையும் சேர்த்து சி.எஸ்.செல்லப்பா என்று தலைப்பு எழுத்துக்களாக ஆங்கிலத்தில் எழுதிவந்தார். மறுமலர்ச்சித் தமிழின் முதல்வரான வ.ரா., தமிழில் எழுதுமாறு சொல்ல அது முதல் சி.சு.செல்லப்பா என்றே எழுதலானார்.

எழுத்தைப் பொது இலட்சியமாகக் கருதி அதன் உறவினால் வளர்ந்த குடும்பம் என்ற அடிப்படையில் மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் பாரதியார் வாழ்ந்த திருவல்லிக்கேணியிலேயே வசித்து வந்தனர்.

சிந்தனையோடு படிக்கும் பழக்கம் மக்களிடம் வளர வேண்டும் என்று விரும்பி அதற்காக எதையும் சுருக்கமாக எழுதும் வ.ரா., மணிக்கொடிக்கு எழுதியவர்களின் படைப்புகளை அப்படியே வெளியிட்டு புதிய எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டினார். வாரப்பதிப்பில் மட்டுமல்லாமல் பின்னால் வந்த கதைப்பதிப்பிலும் மணிக்கொடி படைப்பாளர்களுக்குச் சிறிதளவு ஊதியம் கூட அளிக்க இயலாத பொருளாதாரச் சூழல் ஏற்பட்ட பொழுதும் மணிக்கொடி செம்மையாக வளர்க்கப்பட்டது. அவர்கள் கலை, இலக்கிய, கலாச்சார விடுதலையையும் நாட்டு விடுதலையின் ஒரு

பகுதியாகக் கருதி தியாக வாழ்க்கையை மேற்கொண்டு இலக்கிய வேள்வி செய்தார்கள்.

மணிக்கொடி காரியாலயத்தில் அதன் ஆசிரியக் குழுவினரான பி.எஸ்.இராமையா, கி.ரா., ஆகிய இருவரும் தங்கியிருந்த இடமும் அதுதான். அவர்களுக்கு உறுதுணையாக இருந்த புதுமைப்பித்தனும் அங்கு தங்கியிருப்பார். ‘சிட்டி’யும் சி.சு.செல்லப்பாவும் அங்கு அவ்வப்பொழுது வந்து தங்குவதுண்டு. பல நாள் இரவு முழுவதும் கூட அறையில் விளக்கு வெளிச்சம் இருக்கும். யாராவது ஒருவர் கதை எழுதிக் கொண்டோ, படம் வரைந்து கொண்டோ இருப்பார்கள். பத்திரிகைக்கு உறை ஒட்டி முகவரி எழுதி மணிக்கொடியை அனுப்புவார்கள். இவ்வாறு பலருடைய தன்னலமற்ற கூட்டு உழைப்பில் தான் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

சிறுகதைகளுக்குப் பரிமாணங்களைச் சேர்த்தவர்கள் சோதனையாளர்கள் என்று தனித்து எடுத்துச் சொல்லும்போது புதுமைப்பித்தன் கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, மௌனி, ந.சிதம்பர சுப்ரமணியன், ‘சிட்டி பெ.கோ. சுந்தரராஜன், சி.சு.செல்லப்பா என்று சி.சு. செல்லப்பாவே கணித்துக் கூறுகிறார்.(2)

1930-களில் ஆனந்த விகடனிலும், கலைமகளிலும் ஒரு சில முத்திரைக் கதைகள் இடம்பெற்றன. இருப்பினும் ஒவ்வொரு எழுத்தாளர்களும் தனித்தனியாகக் செய்த பரிசோதனை முயற்சி மணிக்கொடி மேடையில் கூட்டு முயற்சியாகச் செய்யப்பட்டபொழுது அது ‘மணிக்கொடி முத்திரை” என்ற பெயர் பெற்றது. மணிக்கொடியில் பலவிதமான பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மணிக்கொடியில் சுமார் இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளில் பரிசோதனை முயற்சிகள் இடம் பெற்றுள்ளன.

ஒரு நிகழ்ச்சிக்கு இரு கதைகளாகப் புதுமைப்பித்தனும் பி.எஸ். இராமையாவும் எழுதினர். கதைக்குள் கதை சொல்லும் பரிசோதனை முயற்சியைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியவர், ந.பிச்சமூர்த்தி. ஒரு கதையின் மறுபார்வையை ‘சிட்டி’யும் கு.ப.ரா., போன்ற குறிப்பிடத்தக்க மணிக்கொடி எழுத்தாளர்கள் எழுதினர். இச்சிறுகதைகளில் பிரச்சினைகள் பருமனாகக் காட்டப்படாமல் சூக்குமமான நுண்ணிய காந்த ஆற்றலாகக் காட்டப்பட்டு கற்பவரை ஈர்க்கின்றன. இவ்வாறு பல வடிவச் சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பி.எஸ்.இராமையா:

வாரப்பதிப்பு மணிக்கொடியின் உதவியாசிரியராக இருந்து கதைப்பதிப்பு மணிக்கொடியின் ஆசியரானவர் பி.எஸ்.இராமையா. விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா, தத்துவ ஞானியும் தமிழ்நாவல் முன்னோடியுமான பி.ஆர்.இராஜமய்யர் பிறந்த வத்தலகுண்டுதான் பி.எஸ்.ராமையா, சி.சு.செல்லப்பா ஆகியோரின் சொந்த ஊராகும். சுp.சு.செல்லப்பாவை விட ஏழு வயது மூத்தவர் பி.எஸ். இராமையா.

"தமிழ்ச் சிறுகதைத் துறையில் சிறுகதை வியாசர் என்று கணிக்கத்தக்க தலைசிறந்த சிறுகதையாளர்களில் முதலாவதாக இடம் பெற்றிருப்பவர் பி.எஸ்.இராமையா.(3) என்று சி.சு.செல்லப்பா தாம் எழுதிய இராமையாவின் சிறுகதைப்பாணி நூலில் குறிப்பிட்டுள்ளார். சாகித்ய அகாடமி பரிசு பெற்ற பெருமைக்குரிய பி.எஸ். இராமையா அந்தப் பரிசுத் தொகையைக் கொண்டு தன்னுடைய சிறுகதையைப் புத்தகமாகக் கொண்டுவர வேண்டும் என்று செல்லப்பாவிடம் தெரிவித்தார். செல்லப்பா அவருடைய சிறுகதைகளைத் தரம் பிரித்து வரிசைப் படுத்திக் கொடுத்துள்ளார்.

சி.சு.செல்லப்பா:

மணிக்கொடியில் எழுதிய முதல் சிறுகதை "ஸரசாவின் பொம்மை" இக்கதை வெளிவந்ததும் பலரது பாராட்டைப் பெற்றதோடு மணிக்கொடி சீனிவாசனால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, 'ஸண்டே ஸ்டாண்டர்டு' பத்திரிகையில் வெளியிடப்பட்டது. "ஸரசாவின் பொம்மை" செல்லப்பாவிற்குச் சிறந்த எழுத்தாளர் என்ற தகுதியைப் பெற்றுத்தந்தது. சிறந்த எழுத்தாளராக இருந்த அவர் தினமணியில் 1947-லிருந்து 1953 வரை பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டு விமர்சனக் கலையில் ஈடுபடலானார். தினமணி வெளியிட்ட சுடரைக் கதிர்- ஆகப்பெயர் சூட்டிய பெருமை செல்லப்பாவினுடையது. 1959-ஆம் ஆண்டு எழுத்து பத்திரிகையைத் தொடங்கி விமர்சனக் கலையையும் புதுக்கவிதையையும் தனித்தனித் துறையாக வளர்த்து 1970 வரை 119 இதழ்களை வெளியிட்டு இலக்கிய வரலாற்றில் இடம் பிடித்தார். எழுத்து பத்திரிகையின் மூலம் பல புதுக்கவிதைப் படைப்பாளர்களும் எழுத்தாளர்களும் தமிழுக்குக் கிடைத்தனர். 444 அடிகள் கொண்ட "மெரினா" என்னும் நெடுங்கவிதையை அவர் இயற்றினார். அக்கவிதை சொற்சுவை, பொருட்சுவை, செல்லப்பாவுக்குரிய நகைச்சுவை எல்லாம் பொதிந்தது.(4)

பத்து சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தில் வெளிவந்த விமரிசன நூல்களை நூலகங்கள்தோறும் சென்று தேடித்தேடி படித்ததன் விளைவாகத் திறனாய்வுக் கோட்பாடுகளைக் கொண்ட "படைப்பியல்" நூலை 1993-ல் வெளியிட்டார்.

ந. பிச்சமூர்த்தி:

கலைமகள் நடத்திய சிறுகதைப் போட்டியில் ந.பிச்சமூர்த்தி முதற்பரிசு பெற்றார். அதனைத் தொடர்ந்து 1934-ல் "காதல்" என்று கவிதையும், சிறுகதைகளும் மணிக்கொடியில் வெளிவந்தன. பிச்சமூர்த்திக்கு மிக நெருக்கமாக இருந்த சி.சு. செல்லப்பா.

பிச்சமூர்த்தி சட்டத்தொழில் படித்தவர். அவர்; கதைகள் அதை நிரூபிக்கும். செகாவின் கதைகள் அவர் டாக்டர் என்று நிரூப்பிப்பதுபோல, போதிய விழிப்புடன் மெய்யறிவுக் கதையைப் படிக்கிற போது அது வலுவாக நம்மைப் பாதிக்கிறது. "நல்ல சிறு கதைக்கான அத்தனை அம்சங்களும் நிறைந்த கதை அது" என்று மதிப்பிட்டுள்ளார். பிச்சமூர்த்தி சேர்ந்தாற்போல ஒரே குறிப்பிட்ட விஷயங்களைக் கையாள மாட்டார். படைப்பாளி அடிக்கடி சட்டை உரித்துக்கொள்ள வேண்டும் என்பார். மணிக்கொடி காரர்களுக்கு அவர்களே விமர்சகர்களாக இருந்தனர். புதுக்கவிதையென்றால் பிச்சமூர்த்தி பிச்சமூர்த்தி என்றால் புதுக்கவிதை என்று பரஸ்பர இணைப்புக் கொடுத்து பேசும் அளவிற்கு மகத்தான சாதனை அவருடையது. இதுவே பின்னால் சி.சு.செல்லப்பா நடத்திய 'எழுத்து' பத்திரிகைக்கு ஒரு திசையைக் கொடுத்தது. நாற்பதாண்டு காலம் செல்லப்பா பிச்சமூர்த்தியுடன் நெருங்கிப் பழகியுள்ளார்.

கு.ப.ராஜகோபாலன்:

கும்பகோணம் ப. இராஜகோபாலன் கு.ப.ரா., என்று பெயர் சுருக்கி எழுதுவார். இவரும் பிச்சமூர்த்தியும் "மணிக்கொடி இரட்டையர்கள்" என்று அழைக்கப்படுபவர்கள் இருவரும் கும்பகோணத்தில் இளமைப் பருவத்;தைக் கழித்தவர்கள். அடுத்தடுத்த வீட்டில் வாழ்ந்த ஒத்தவயதுடையவர்கள். பிச்சமூர்த்தியைவிட கு.ப.ரா., இரண்டு வயது இளையவர். இருவரும் புதுக்கவிதை முன்னோடிகள். பாரதிக்குப்பின் வசனக் கவிதையை வளர்த்தவர்கள். பத்து வருட காலம் கு.ப.ரா.,வுடன் நெருங்கிப் பழகியவர் செல்லப்பா. வ.ரா.,வுக்கு அடுத்தபடியாகப் பெரியவர்கள் எங்கள் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் என்று செல்லப்பா தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். கு.ப.ரா.,வின் கதைகளில் நடப்பு, கற்பனை, இலட்சியம் மூன்றும் கூட்டு தகவல்களாக இருக்கும். கலப்படமாக அல்ல கலவையாக. ஒரு உயர்தர படைப்பாளியால்தான் இதை சாதிக்க முடியும் என்று செல்லப்பா மணிக்கொடி சிறுகதை முதல்வர்கள் என்ற தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். சிறுகதை என்ற இலக்கிய ரூபம் அதிகமாக வளர்ச்சி அடைந்திராத காலத்திலேயே அவர் பல சோதனைகள் செய்து இன்றைய வடிவங்கள் பலவற்றுக்கும் அச்சுகள் வடித்துக் கொடுத்திருக்கிறார். தெலுங்கு, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், வங்காளி போன்ற பன்மொழிப் புலமை வாய்ந்த கு.ப.ரா., கண்நோய் காரணமாக அரசாங்கப் பணியிலிருந்து விலகிய பிறகும்

கதை கவிதைகளைச் சொல்ல,சொல்ல அவரது சகோதரி கு.ப.சேதுஅம்மாள் எழுதினார். அந்தப் பயிற்சியினால் சேது அம்மாள் தன் சகோதரரையே குருவாகக் கொண்டு, அவரும் மணிக்கொடியில் 15 சிறுகதைகள் எழுதியுள்ளார். பிற பத்திரிகைளில் 200 சிறுகதைகளையும், எட்டு நாவல்களையும் படைத்துள்ளார். அவர் பெண் என்ற காரணத்தினாலோ என்னவோ அவருடைய படைப்புகள் அக்காலத்தில் பேசப்படவில்லை.

சென்னையில் மட்டுமல்லாமல் ந.பிச்சமூர்த்தி கு.ப.ரா, எம்.வி.வெங்கட்ராம் போன்ற மணிக்கொடி எழுத்தாளர்கள் கும்பகோணத்தில் பாரதியார் சங்கம் நிறுவி அங்கும், காந்தி பூங்காவிலும் கூடி மணிக்கொடி படைப்புகளை விமர்சனம் செய்தனர். மணிக்கொடி, மணிக்கொடி என்று பேசுகிறார்களே இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிரானவர்களோ என்று அக்கால காவல்துறையினர் மாற்றுடையில் வந்து சந்தேகிக்கும்படி எழுத்தாளர்களின் கூட்டம் நடைபெற்றுள்ளது.

புதுமைப்பித்தன்:

புதுமைப்பித்தன் என்ற சொ.விருத்தாசலம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஊரிலிருந்து எழுத ஆரம்பித்த சில மாதங்களில் காரைக்குடியில் நடத்தப்பட்ட ‘குமரன்’ பத்திரிகையில் பணியாற்றினார். 1934–ஆம் ஆண்டில் காந்தி, மணிக்கொடி, குமரன், ஊழியன் ஆகிய பத்திரிகைகளில் கதைகள் எழுதியிருக்கிறார். இவர் மணிக்கொடியில் எழுதிய முதல் சிறுகதை துன்பக்கேணி ஆகும். மணிக்கொடிகாரர்கள் அதிகபட்ச சிறுகதைகளை (29) மணிக்கொடிக்கு முன் எழுதியவர் புதுமைப்பித்தன் மட்டும்தான். மணிக்கொடிகாரர்கள் ஒவ்வொருவரும் சோதனைக்காரர்கள். ஒருவர் சோதனையை மற்றவர் எழுதியதில்லை எழுதவும் முடியாது. அவரவர் உலகம், பார்வை, உத்தேசம், மதிப்பு, வெளியீடு, அனுபவம், நடை, பாணி, வர்ணனை, தோரணை தனித்த விதமானது. இதை இன்றைய வாசகர் அறிந்து கொள்ள வேண்டும் என்று செல்லப்பா கூறியுள்ளார்.

சிதம்பர சுப்ரமணியம்:

மணிக்கொடியில் உருவான சிதம்பர சுப்ரமணியத்தோடு ஒரே வீட்டில் வாழ்ந்தவர் சி.சு.செல்லப்பா. உலகத்தரத்திற்குச் சிறுகதை எழுதும் ஆசிரியர்களில் ஒருவராக வ.ரா., போன்ற முன்னோடிகளாலும் சி.சு.செல்லப்பா, சிட்டி, க.நா.சு., போன்ற சமகாலத்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். 1977–ல் சிதம்பர சுப்ரமணியன் காலமான பிறகு ஏற்பட்ட தனிமையைப் போக்க செல்லப்பா சென்னையை விட்டு சொந்த ஊரான வத்தலகுண்டு சென்றார்.

மௌனி:
சிதம்பரத்திலிருந்து 'மௌனி' என்ற புனைபெயரில் மணிக்கொடியில் எழுதிய மணி என்பவர் 'ஏன்' 'காதல்சாலை'' குடும்பத்தேர்' போன்ற எட்டு சிறுகதைகளை மணிக்கொடி காரியாலயத்தில் இராமையா, கி.ரா., செல்லப்பா ஆகியோர் தங்கியிருந்தபோது ஒருவர் கொண்டுவந்து கொடுத்தார். ஒரு கதைக்குத் தலைப்பிடாமலே எழுதியிருந்தார். கதையைப் படித்த மூவரும் பாராட்டும் விதத்தில் கதை இருந்தது. பிறகு மணிக்கொடியில் பிரசுரிக்கப்பட்டது.

செல்லப்பா எழுத்து பத்திரிகையில் மௌனியின் சிறுகதைகளை மதிப்பீடு செய்து மௌனியின் 'மனக்கோலம்' என்று எழுதியுள்ளார். மௌனியின் கதை தனி மனித அகமன நடப்புப் பாங்குடையது.உளவியல் ரீதி கொண்டது. மௌனியின் கதை புதுப்பரிமாணம் சேர்த்தது என்று சி.சு. செல்லப்பா குறிப்பிட்டுள்ளார்.

'சிட்டி' பெ.கோ. சுந்தரராஜன்:
மணிக்கொடியில் வெளிவந்த வ.ரா.,வின் கட்டுரைகளைப் படித்த 'சிட்டி' சுந்தரராஜன் கட்டுரை படிப்பதாகவே தோன்றவில்லை. யாரோ நேரில் பேசுவது போலவே இருக்கும் என்கிறாh.; வ.ரா.,வின் எழுத்து நடையால் கவரப்பட்டு மகாத்மா காந்தியின் அன்றைய சென்னை விஜயத்தைப்பற்றி நகைச்சுவையுடன் ஒரு கட்டுரை எழுதி 'சிட்டி' மணிக்கொடிக்கு அனுப்பினார். அக்கட்டுரை மணிக்கொடியில் உடனே வெளிவந்தது. அப்பொழுது பொன்னேரியில் ஆசிரியராகயிருந்த 'சிட்டி' மணிக்கொடியில் சிறுகதைகள் எழுதத் தொடங்கினார்.

'சிட்டி'யின் சிறுகதைகள் ஒரு குழந்தையின் நகக்கீரல் அளவுக்குத்தான் ஒரு கணநேர மெல்லிய சிலிர்ப்பு எண்ணங்களால் உருவான கதை. எண்ணங்கள் கதை வாக்கியங்களில் அமைந்துள்ளன. பண்புருவான ( யுடிளவசயஉவ) மனோரீதியான, ஆழ் கருத்தான, சிந்தனைப் போக்கான தன்மைகள் இந்தக் கதைகளில் முக்கியமாகக் காணப்படுவது. சம்பவங்களைப் பின் தள்ளி, அதன் விளைவு பயன்போக்குகள் மனப்பிரதிபலிப்புகளாக, யோசனைகளைத் தன் மன உழட்டலாக தன்னோடு தான் பேசலாக, வெளிப்படுத்தப்படுவது. இந்தவித கதைகளில் காணப்படும் உத்திகள், இந்த உத்திகளைச் சோதனை முயற்சிகளாகச் செய்த முதல்வர் சுந்தரராஜன் என்று சி.சு.செல்லப்பா தம் நூலில் பாராட்டியுள்ளார்.

முதுமைக்காலத்தில் மணிக்கொடி எழுத்தாளர்களில் செல்லப்பாவும், சிட்டியும் தான் அடிக்கடி சந்தித்து இலக்கியத்திறனாய்வை இளம் ஆய்வாளர்களிடம் கொண்டு சேர்த்தார்கள்.
"நோயாளியின் நாடியைப் பிடித்து நரம்புத் துடிப்பையும்

நோயையும் அறிந்து கொள்ளும் சிறந்த மருத்துவரைப் போல
ஆய்வாளனும் இலக்கியத்தின் நாடியைப்பிடித்து அதன் தரத்தை
அறிந்து கொள்ளும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும்" (5)

என்று செல்லப்பா இக்கட்டுரையாளரிடம் கூறியுள்ளார். இளம் ஆய்வாளர்கள் இக்கருத்தைப் பின்பற்றினால் தமிழ் இலக்கியத்தின் தரமும், திறனாய்வும் மேன்மேலும் வளரும்.

உ.வே.சா.,வும் மகாகவி பாரதியும் பிற மணிக்கொடி எழுத்தாளர்களும் வாழ்ந்த திருவல்லிக்கேணியில் வாழ்வதையே சி.சு.செல்லப்பா விரும்பினார்.மணிக்கொடி காலத்தில் 'தமிழ்நாடு' பத்திரிகையில் வ.ரா., கு.ப.ரா.,வுடன் பணியாற்றியபொழுது மூவரும் கடற்கரை ஓரமாகவே இலக்கியங்களைப்பற்றி பேசிக் கொண்டே வருவது வழக்கம். நான் இறந்தாலும் இந்த திருவல்லிக்கேணியில் தான் என் மூச்சுக்காற்று இருக்கும் என்று சி.சு.செல்லப்பா கூறினார்.

முடிவுரை:

85 வயதுவரை வெடிப்புற பேசியும், எழுதியும் வந்தவர். தமிழிலே சிறுகதை, நாவல், புதுக்கவிதை, விமர்சனம் என்று பல துறைகளில் தம் திறமையை வெளிக்கொணர்ந்த சி.சு.செல்லப்பா புத்தகப் பதிப்பாளராகவும், முழுநேர எழுத்தாளராகவும் 'எழுத்து' பத்திரிகை ஆசிரியராகவும் புகைப்பட கலைஞராகவும் இயக்கங்கள் சாதிக்காததைத் தனிமனிதனாகச் சாதித்துக் காட்;டியவர். கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியன் "நவீன உ.வே.சா.," என்று செல்லப்பாவைப் பாராட்டினார். அவர் சொல் வேறு செயல் வேறு என்றில்லாமல் சொல்லும் செயலும் ஒன்றாகவே வாழ்ந்து காட்டியவர். அல்லும் பகலும் அயராது தற்காலத் தமிழுக்காக உழைத்தவர்.

அடிக்குறிப்பு

1. சி.சு.செல்லப்பா, சுதந்திர தாகம், பாகம் 1, ப.10
2. சி.சு.செல்லப்பா, மணிக்கொடி சிறுகதை முதல்வர்கள், ப.3
3. சி.சு.செல்லப்பா, ராமையாவின் சிறுகதை பாணி, ப.1
4. வி.ராமமூர்த்தி, சாதனைச் செம்மல் சி.சு.செல்லப்பா, ப.70
5. சி.சு.செல்லப்பா, இக்கட்டுரையாளரிடம் நேர்க்காணலில் கூறியது, தேதி:15-04-1989

துணை நின்ற நூல்கள்

1. சி.சு.செல்லப்பா, சுதந்திர தாகம், பாகம் 1, வெளியீடு, எழுத்து வெளி, திருவல்லிக்கேணி, பிள்ளையார் கோயில் தெரு, சென்னை-5

2. சி.சு.செல்லப்பா, தமிழ் சிறுகதை பிறக்கிறது, பீக்காக் பதிப்பகம், 12, முதல்தெரு, வடக்கு கோபாலபுரம், சென்னை-86, முதற்பதிப்பு, ஆண்டு 1988
3. சி.சு.செல்லப்பா, மணிக்கொடி சிறுகதை முதல்வர்கள், பீக்காக் பதிப்பகம், 12, முதல்தெரு, வடக்கு கோபாலபுரம், சென்னை-86, முதற்பதிப்பு, ஆண்டு 1990
4. வி.ராமமூர்த்தி, சாதனைச் செம்மல் சி.சு.செல்லப்பா, வானதிபதிப்பகம், தி.நகர், சென்னை-17, முதற்பதிப்பு, 2002.
5. சி.சு.செல்லப்பா, படைப்பியல், பீக்காக் பதிப்பகம், 12, முதல்தெரு, வடக்கு கோபாலபுரம், சென்னை-86, முதற்பதிப்பு, ஆண்டு 1993